அனுப்புநர்

திருமதி.பி.எஸ்.லீலா அலெக்ஸ், இ.ஆ.ப.,

மாவட்ட தேர்தல் அலுவலர்/

மாவட்ட ஆட்சித் தலைவர்,

வேலூர் மாவட்டம்,

வேலூர் -09.

பெறுநர்

1. மண்டல இணை இயக்குநர்
   கல்லூரி கல்வி இயக்கம், அரசு கலைக் கல்லூரி வளாகம்,
   வேலூர்.
2. முதல்வர்,
   திருவள்ளுவர் பல்கலைக் கழகம்,
   வேலூர்.
3. முதல்வர்,
   தந்தை பெரியார் அரசினர் பொறியியல் கல்லூரி,
   வேலூர்.
4. முதன்மைக் கல்வி அலுவலர்,
   வேலூர்.
5. முதல்வர்,
   வி.ஐ.டி பல்கலை கழகம்,
   வேலூர்.

---

**ந.க.எண்.எச்2/4691129/2026, நாள்:17.09.2026.**

---

ஐயா/அம்மையீர்,

பொருள் : தேர்தல்கள் - வேலூர் மாவட்டம் - கல்வி நிறுவனங்களில்- ELC 2.0 (Electoral Literacy Clubs (ELCs) ஏற்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல் - ELC 2.0 - தேவையான நடவடிக்கை - கூட்டம் நடத்துதல் தொடர்பாக.

பார்வை : 1. தலைமை தேர்தல் அலுவலர்/அரசு முதன்மைச் செயலர் அவர்களின் கடிதம் எண்.21437/தேர்தல்கள்-7/2026-1, நாள்:01.09.2026.

2. இணை தலைமை தேர்தல் அலுவலர் அவர்களின் Google Meet, நாள்: 10.09.2026.

.......

பார்வை 1-ல் காணும் கடிதத்தில், இந்தியத் தேர்தல் ஆணையத்தால் ELC 2.0 திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் தேர்தல் எழுத்தறிவு மன்றங்களை (Electoral Literacy Clubs - ELCs) ஏற்படுத்தி, இளம் வாக்காளர்கள் மற்றும் குடிமக்களுக்கு ஜனநாயக நெறிமுறைகள், தேர்தல் செயல்முறை மற்றும் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் பங்கு மற்றும் செயல்பாடுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில், SVEEP திட்டத்தின் ஒரு பகுதியாக ELC-கள் 2018-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதாகவும்

தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ELC-களை ECI-யின் பிரத்யேக ELC வலைதளத்தில் பதிவு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இளம் குடிமக்கள் டிஜிட்டல் தளங்கள் மூலம் தகவல்களுடன் அதிகளவில் ஈடுபட்டு வருவதால், தொடர்ச்சியான, கட்டமைக்கப்பட்ட, அனுபவப்பூர்வமான மற்றும் டிஜிட்டல் முறையில் செயல்படுத்தப்படும் தேர்தல் கற்றலை நோக்கி நகர வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, **தேர்தல் எழுத்தறிவு மன்றங்கள் (ELCs) ELC 2.0 என்ற புதிய வடிவமைப்பில் மறுவடிவமைக்கப்பட்டுள்ளன.** இந்தியத் தேர்தல் ஆணையத்தின் (ECI) இணையதளத்தில் உள்ள பிரத்யேக வலைதளத்தின் மூலம், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் ஜனநாயகம் மற்றும் தேர்தல் குறித்த கற்றல் மற்றும் ஈடுபாட்டிற்கான ஆண்டு முழுவதும் செயல்படும் தளங்களாக ELC-களை நிறுவுவதற்கான நவீன கட்டமைப்பாக ELC 2.0 உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும், பார்வை 2-ல் காணும் Google Meet-ல், மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் ELC-களை ஏற்படுத்தி, ELC Coordinator மற்றும் மாணவர்களை ELC வலைதளத்தில் பதிவு செய்யவும், மாவட்ட அளவில் ELC தொடர்பான கூட்டம் நடத்தவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, வேலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் ELC Coordinator ஒருவரை நியமித்து, www.eci.gov.in/electoral-literacy-club என்ற ECI வலைதளத்தில் பதிவு செய்து, பெறப்பட்ட Unique ELC ID உள்ளிட்ட விவரங்களை 18.09.2026-க்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், ELC தொடர்பான மாவட்ட அளவிலான கூட்டம் 21.09.2026 அன்று மாலை 4.00 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகம், 5-வது மாடி கூட்டரங்கில் நடைபெற உள்ளது. எனவே, ஒவ்வொரு கல்வி நிறுவனத்திலிருந்தும் ELC Coordinator மற்றும் ஒரு மாணாக்கர் (Campus Ambassador) ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

| வ. எண். | கல்வி நிறுவனத்தின் பெயர் (பள்ளியின் பெயர் உயர்நிலை/மேல்நிலை/கல்லூரி/ பல்கலைக்கழகம்) | ELC Coordinator" பெயர், பதிவி, கைபேசி எண். | ELC வலைத்தளத்தில் பதிவு செய்து பெறப்பட்ட தனித்துவ அடையாள எண். (Unique ELC ID) |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |

இணைப்பு: அரசு கடிதம் நகல்.

மாவட்ட தேர்தல் அலுவலர்/
மாவட்ட ஆட்சித் தலைவருக்காக,
வேலூர்.

நகல்

அனைத்து வாக்காளர் பதிவு அலுவலர்/
உதவி வாக்காளர் பதிவு அலுவலர்
வேலூர் மாவட்டம்.

சம்மந்தப்பட்ட கல்வி நிறுவன பொறுப்பாளர்களை நேரில் தொடர்பு கொண்டு தங்கள் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அனைத்து கல்வி நிறுவனங்களையும் பதிவு செய்ய தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

2. மக்கள் தொடர்பு அலுவலர் (PRO), வேலூர்.

3. தலைமை தேர்தல் அலுவலர்/ அரசு முதன்மைச் செயலர்,
பொது (தேர்தல்கள்-7) துறை, தலைமைச் செயலகம்.
சென்னை – 600 005. (தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.)

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ஓ.மு.எண்.2833/ஆ5/2026 நாள். 18.09.2026

(நகல்)– தக்க நடவடிக்கைக்காக அனைத்து வகை பள்ளிகளுக்கு அனுப்பலாகிறது.

பெறுநர்

அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்-632 009.

நகல் –

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள், (இடைநிலை / தனியார் பள்ளிகள்)
வேலூர் மாவட்டம். (உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)